# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION

(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)

No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| **S.K.Ramasamy. LIC** | **P.Rajakumar** | **A.C.Thangavel** | **P.Vijayakumar** | **K.Gangadharan** |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>**K.Velliangiri**<br>Chennimalai |


DATE : 28·04·2026

## ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன்

1 சங்கத்தின் பெயர் : ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன்.
**Erode District Amateur Kabaddi Association.**

2 சங்கத்தின் முகவரி : No.60 சாரதா மாரியம்மன் கோவில் வீதி, கோபிசெட்டிபாளையம் ஈரோடு - 638 452.

3 சங்கத்தின் பதிவு எண் :

4 சங்கத்தின் அதிகார எல்லை : ஈரோடு மாவட்டம் முழுவதும்,
அந்தியூர், பவானி, ஈரோடு, கோபிசெட்டிபாளையம், கொடுமுடி, மொடக்குறிச்சி, நம்பியூர், பெருந்துறை, சத்தியமங்கலம் & தாளவாடி.

5 சங்கத்தின் தாய் அமைப்பு : தமிழ்நாடு அமெச்சூர் கபாடி அசோசியேசன்(TNAKA)

6 சங்கத்தின் அகில இந்திய அமைப்பு : அமெச்சூர் கபாடி - பெடரேஷன் ஆப் இந்தியா(AKFI)

7 சங்கத்தின் நோக்கங்கள்

A. தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான கபாடி விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து கபாடி விளையாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவது,

B. கபாடி வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இடையே சாதி, மத வேற்றுமையை அகற்றி ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் பேணிக்காப்பது,

C. மாவட்டத்தில் உள்ள அனைத்து கபாடி வீரர்கள் & வீராங்கனைகளை ஒருங்கிணைத்து சமூக நல்லுணர்வை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தி தேசிய ஒருமைப்பாட்டை பாதுகாப்பது.

D. மத்திய மற்றும் மாநில அரசின் விளையாட்டு துறை சம்பந்தப்பட்ட திட்டங்களை விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு தெரிவித்து அவர்கள் பயனடையும்படி வழிகாட்டுதல்.

E. SAI-SPORTS AUTHORITY OF INDIA, SDAT தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதிகளில் தங்கி கபாடி பயிற்சியுடன் கூடிய படிப்புக்கு உதவுவது.

F. இயற்கை வளம், சுற்றுச்சூழல், மாசு கட்டுப்பாடு, சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் சார்ந்த உறவுமுறை அறிவுரைகள், மருத்துவம் சார்ந்த பயன்பாடுகளை விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் முற்றிலும் கற்றறிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.

G. மாவட்ட அளவில் சிறுவர், சிறுமிகள், மாணவ, மாணவிகள் மற்றும் இளைஞர்களுக்கு நமது கபாடி விளையாட்டு பயிற்சியை முறைப்படி பயிற்றுவித்து அவர்கள் மாநில போட்டியிலும் தேசிய போட்டியிலும் பங்கேற்று விளையாடுவதற்கு ஏற்றபடி அவர்களின் திறனை வளர்த்தல்.

Chairman
S.K.Ramasamy. LIC
Sundakkapalayam

President
P.Rajakumar
Gobichettipalayam
97892 23379
yazhinirajkumar2000@gmail.com

Secretary (Incharge)
A.C.Thangavel
Joint Secretary
Chennimalai
99415 21256

Treasurer
P.Vijayakumar
Erode
98427 53547

Organizing Secretary
K.Gangadharan
Erode
K.Velliangiri
Chennimalai

H. மாவட்டத்தில் உள்ள பொதுநல அமைப்புகளுடன் இச்சங்கம் இணைந்து ரத்ததானம் மற்றும் கண்தானம் போன்ற சமூக சேவைகளில் வீரர்கள் வீராங்கனைகளின் துணையுடன் ஈடுபடுவது.

I. பொதுமக்களை அச்சுறுத்தும் பேரழிவு மற்றும் இயற்கை சீற்றங்கள் ஏற்படும்போது மக்களைப் பாதுகாத்தல்

J. வீரர்கள் வீராங்கனைகளுக்கு நல் ஒழுக்கம், நல் அறிவு, நற்பண்பு, நற்கல்வி, பயிற்றுவிப்பது.

K. ஏழை எளிய வீரர்கள், வீராங்கனைகள், குழந்தைகள், மாணவ செல்வங்கள் அனைவருக்கும் கல்விப் படிப்புக்கு உதவுதல்.

L. அரசின் சட்டதிட்டங்களை முழுமையாக கற்பித்தல்.

M. உறுப்பினர்கள் இடையே வசூலிக்கப்படும் சந்தா, நன்கொடை மற்றும் போட்டி கட்டணம், பதிவு கட்டணம், போன்ற நிதி இருப்பை கொண்டு மேலே கண்ட நோக்கங்களை செயல்படுத்த இச்சங்கம் பாடுபடுதல்,

8 உறுப்பினர்கள்

A. ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன் சார்பில் நடைபெறும் மாவட்ட அளவிலான சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டு விளையாடும் கபாடி அணிகள், அந்த அணிகளின் வீரர்களால் பரிந்துரை கடிதம் பெற்ற இரண்டு நபர்கள், மாவட்ட கபாடி சங்கத்தின் உறுப்பினர்கள், அதாவது பொதுக்குழு உறுப்பினர்கள் ஆவார்கள்.

B. ஈரோடு மாவட்டத்தில் விளையாடும் கபாடி அணிகள் அந்த அணிகளின் இரண்டு நபர்கள் (தலைவர் & செயலாளர்) மாவட்ட கபாடி சங்கத்தில் உறுப்பினராக சேர்வதற்கு தகுதி உடையவர்கள்.

C. மாவட்ட அளவிலான சேம்பியன்ஷிப் போட்டியில் கலந்துகொள்ள வீரர்கள் வீராங்கனைகள் வயது வரம்பு 16 வயது க்கு மேல்.

D. வீரர்கள் வீராங்கனைகள் ஈரோடு மாவட்டத்தை சேர்ந்தவர் என்பதற்கான அடையாள அட்டையாக ஆதார் கார்டு வைத்திருக்க வேண்டும்.

E. ஒரே ஊரில் ஒரு அணியின் பெயரில் இரண்டு அணிகள் இருந்தால் சீனியர் & ஜூனியர் என்ற வகையில் சேம்பியன்ஷிப் போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

F. மாவட்ட அளவிலான சேம்பியன்ஷிப் போட்டி மாவட்ட விளையாட்டு அலுவலக மைதானத்தில் அனுமதி பெற்று நடத்தப்படும்.

9 1 பொதுக்குழு உறுப்பினர்கள் சங்கத்தின் செயல்பாடுகளுக்கு உதவிகரமாகவும், உண்மையாகவும் இருக்க வேண்டும்.

2 பொதுக்குழு உறுப்பினர்கள் சங்கத்தின் விதிகளுக்கு கட்டுப்பட்டு விதிமுறைகளை பின்பற்றி நடக்க வேண்டும்.

3 மாவட்ட கபாடி சங்கத்தில் ஒரு அணியின் பதிவுக்கட்டணம் ரூ 200/-ஐ செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.

4 பொதுக்குழு உறுப்பினர்களை கொண்ட ஒவ்வொரு அணியும் வருட சந்தா ரூபாய் 200/- தவறாமல் செலுத்தி தங்கள் அணியின் பதிவை புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| S.K.Ramasamy. LIC | P.Rajakumar | A.C.Thangavel | P.Vijayakumar | K.Gangadharan |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>K.Velliangiri<br>Chennimalai |

5 தொடர்ந்து மூன்று வருடங்கள் அணியின் பதிவுத்தொகை செலுத்தாத உறுப்பினர்கள் மாவட்ட கபாடி சங்கத்திலிருந்து நீக்கப்படுவார்கள்.

6 சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கும், நோக்கங்களுக்கும், துணை விதிகளுக்கும் விரோதமாக உறுப்பினர்கள் செயல்பட்டு அது உண்மை என்று நிரூபணம் ஆகியும் சங்கத்திற்கு ஏற்படும் சகல கஷ்ட நஷ்டங்களுக்கும் காரணமாக செயல்படும் உறுப்பினர்கள் மீது நிர்வாகக் குழுவின் முடிவுப்படி சங்கத்தின் செயலாளரால் மாவட்ட கபாடி சங்கத்திலிருந்து நீக்கப்படுவார்கள்.

7 அவ்வாறு நீக்கப்படும் விபரம் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்து மேற்படி உறுப்பினர்கள் சங்கத் தலைவரிடம் மேல்முறையீடு செய்ய 30 தினங்கள் கால அவகாசம் வழங்கப்படும்.

8 மேற்படி உறுப்பினர்களின் மேல்முறையீட்டு மனுவை விசாரிக்க பொதுக்குழு மூலம் ஒழுங்கு நடவடிக்கை கமிட்டி அமைத்து விசாரிக்கப்படும். இந்த விசாரணையின் முடிவில் பொதுக்குழுவின் முடிவே இறுதியானது.

**10 உறுப்பினர்களின் கடமையும் உரிமையும்**

1 உறுப்பினர்கள் அனைவரும் ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன் பொதுக்குழுவில் கலந்து கொள்ள உரிமை உண்டு.

2 உறுப்பினர்கள் அனைவருக்கும் பொதுக்குழுவில் தீர்மானம் கொண்டு வரவும், அதன் மீது விவாதம் நடத்தவும், ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளவும் உரிமை உண்டு.

3 உறுப்பினர்கள் ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன் தேர்தலில் பங்கு பெறவும் நிர்வாக குழுவில் இடம்பெறவும் உரிமை உண்டு.

4 உறுப்பினர்கள் சங்கத்தின் நன்மைக்கும், முன்னேற்றத்திற்கும் ஆலோசனை வழங்கவும் வெளிப்படைத்தன்மை செயல்பட உதவிகரமாகவும் இருத்தல் அவசியம்.

5 சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன் சட்ட திட்டங்களுக்கும், பொதுக்குழு நிர்வாக குழு தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டு அதனை பின்பற்றி நடக்க வேண்டும்.

6 சங்கத்தின் உறுப்பினர்களின் உரிமைகள் சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பாதுகாக்கப்படும்.

11 நிர்வாக குழு

ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன் என்ற இந்த சங்கம்

| | | | |
| --- | --- | --- | --- |
| 1 | தலைவர் | - | 1 |
| 2 | செயலாளர் | - | 1 |
| 3 | பொருளாளர் | - | 1 |
| 4 | துணை தலைவர் | - | 5 |
| 5 | இணை செயலாளர் | - | 5 |
| 6 | செயற்குழு உறுபினர்கள் | - | 14 |
| | | | 27 |

ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன் என்ற இந்த சங்கம் மேற்கூரிய 27 உறுபினர்களை கொண்ட செயற்குழுவால் நிர்வகிக்கப்படும்.

1 இந்த நிர்வாக குழு உறுப்பினர்கள் 4 வருடத்திற்கு ஒரு முறை பொதுக்குழுவை கூட்டி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களின் பதவி காலம் 4 வருடங்களாகும்.

2 மாவட்ட சங்கத்தின் தேர்தல் மத்திய அரசின் **NSDCI –** (NATIONAL SPORTS DEVELOPMENT CODE) **2011** ல் குறிப்பிட்டுள்ள **Model Election Guidelines**-ஐ பின்பற்றி நடத்தப்படும்.

3 நிர்வாக குழு 3 மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்படும்.

4 தொடர்ந்து மூன்று நிர்வாக குழு கூட்டத்திற்கு வராத நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தங்கள் பதவியை இழந்து விடுவார்கள்.

5 நிர்வாக குழு உறுப்பினர்களின் பதவி காலம்,

தலைவர் - 12 வருடங்கள் - 3 பதவி காலம். (தலா நான்கு ஆண்டுகள்)

செயலாளர் - 8 வருடங்கள் - 2 பதவி காலம். (தலா நான்கு ஆண்டுகள்)

பொருளாளர் - 8 வருடங்கள் - 2 பதவி காலம். (தலா நான்கு ஆண்டுகள்) மத்திய அரசின் NSDCI-2011-ன் படி பதவி வகிக்க முடியும்.

6 இந்திய விளையாட்டுத்துறை அமைச்சகம் அறிவித்துள்ள **NATIONAL SPORTS, Governance ACT 2025** ஐ **AKFI & TNAKA** பின்பற்றும்போது அந்த **ACT-2025** ஈரோடு மாவட்டத்தில் அமலுக்கு வரும்.

7 மாநில மற்றும் மத்திய அரசு ஊழியர்கள் **NSDCI-2011**-ன் படியும், **5** ஆண்டுகள் மட்டுமே சங்கத்தின் தலைவர் & செயலாளர் & பொருளாளர் பதவி வகிக்க முடியும்.

8 சங்கத்தின் தலைவர் & செயலாளர் & பொருளாளர் வயது வரம்பு **70**-வயது **NSDCI- 2011**,ன் படி பின்பற்றப்படும்.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| S.K.Ramasamy. LIC | P.Rajakumar | A.C.Thangavel | P.Vijayakumar | K.Gangadharan |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>K.Velliangiri<br>Chennimalai |


12. சங்கத்தின் செயல்பாடுகள்

1 பொதுக்குழுவை கூட்டி சங்கத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சப் - ஜூனியர், ஜூனியர், சீனியர் ஆண்கள் & பெண்கள் சேம்பியன்ஷிப் போட்டி நடத்தப்படுவது குறித்து தீர்மானம் நிறைவேற்றப்படும்.

2 சங்கத்தின் மூலம் மாநில சேம்பியன்ஷிப் போட்டிக்கு வீரர்கள் & வீராங்கனைகளை மாவட்ட சேம்பியன்ஷிப் போட்டியிலோ (or) மாவட்ட அளவிலான பொறுக்கு தேர்விலோ, தேர்வுக்குழு மூலம், தேர்வு செய்து சிறப்பு பயிற்சி கொடுத்து மாவட்ட அணிகளை உருவாக்குதல் குறித்து பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

3 சங்கத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களின் கபாடி அணிகள் அனைத்தும் மாவட்ட கபாடி கழக விதிமுறைகள் மற்றும் சட்ட திட்டங்கள் அனைத்தையும் முழுமையாக பின்பற்றி நடக்க வேண்டும் என்று பொதுக்குழுவால் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

4 சங்கத்தின் பணிகளை கவனித்துக் கொள்ள பணியாளர்களை அமர்த்திக் கொள்ளவும், அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் பற்றிய விவரங்களை பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

13 நிர்வாக குழுவின் கடமைகள்

1 நிர்வாக குழு கூட்டம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்படும்.

2 நிர்வாக குழுவில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு நிர்வாக குழு உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

3 நிர்வாக குழு கூட்டம் நடைபெறும் ஒரு வாரத்திற்கு முன்பே கூட்டம் நடைபெறும் இடம், தேதி, நேரம், கூட்டத்தின் நோக்கம், பொருள் ஆகியவை கொண்ட அறிவிப்புக் கடிதத்தை அனைத்து நிர்வாக குழு உறுப்பினர்களுக்கும் நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்ப வேண்டும்.

4 நிர்வாக குழு உறுப்பினர்கள் சங்கத்தின் வரவு செலவு கணக்கினை சரிபார்த்து சான்று செய்யப்பட வேண்டும்.

5 பொதுக்குழுவில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நிறைவேற்ற நிர்வாகக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6 சங்கத்தின் சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகள் மாற்றம், ஒழுங்கு முறைகளில் மாற்றம் செய்யப்படும் போது அவற்றை பரிசீலித்து பொதுக்குழுவிற்கு கொண்டு செல்ல வேண்டும்.

7 சங்கத்தின் நிதி ஆண்டு முடிந்து கணக்குகள் தணிக்கை செய்ய சங்கத்தின்தணிக்கையாளரை நியமிக்க வேண்டும்.

8 சங்கம் நல்ல முறையில் செயல்படுவதற்கு வளர்ச்சியை கருத்தில் கொண்டு அனைத்து நடவடிக்கைகளையும் ஆக்கப்பூர்வமாக செயல்படுத்த பாடுபடவேண்டும்.

## 14 நிர்வாகக்குழு தலைவர் கடமைகள்

1 நிர்வாக குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்தை தலைமை தாங்கி நடத்திக் கொடுக்க வேண்டும்.

2 பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்ற செயலாளரின் துணையுடன் முயற்சி எடுக்க வேண்டும்.

3 நிர்வாக குழு உறுப்பினர்களின் ஆதரவுடன் சங்கத்தின் சகல காரியங்களையும் சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடத்தி வைப்பார்.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| S.K.Ramasamy. LIC | P.Rajakumar | A.C.Thangavel | P.Vijayakumar | K.Gangadharan |
| Sundakkapalayam | Gobichettipalayam | Joint Secretary | Erode | Erode |
| | 97892 23379 | Chennimalai | 98427 53547 | K.Velliangiri |
| | yazhinirajkumar2000@gmail.com | 99415 21256 | | Chennimalai |


4 சங்க நலனுக்காக சுயநலம் பாராது அயராமல் உழைக்க வேண்டும்.

5 சங்கத்தின் நிர்வாகிகள், செயலாளர் மற்றும் பொருளாளர் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களுடன் இணைந்து சந்தா நன்கொடைகள் வசூல் செய்தல்.

15 (அ) செயலாளர்

1 தலைவர் ஆலோசனைப்படி சங்கத்தின் சகல கூட்டங்களையும் கூட்டுவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்.

2 சங்கத்தின் அனைத்து கடிதப் போக்குவரத்துகளையும் தலைவரின் ஒப்புதலுடன் நடத்த வேண்டும் சங்கத்தின் அன்றாட பணிகளை கவனிக்க வேண்டும்.

3 நிர்வாக குழுவின் ஆலோசனைப்படி சங்கத்தின் நோக்கங்கள் மற்றும் செயல்முறை திட்டங்களை நிறைவேற்றி தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4 சங்க நலனுக்காக சுயநலமின்றி உழைக்க வேண்டும்

5 சங்க உறுப்பினர்களிடமும், பொருளாளருடனும் சேர்ந்து சந்தா மற்றும் நன்கொடைகளைப் பெற்று சங்க வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கவேண்டும்.

6 சங்க கூட்ட நிகழ்வுகளை மினிட் புத்தகத்தில் எழுதி கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரின் கையொப்பங்களை பெற வேண்டும். சங்க பதிவேடுகளை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

7 சங்க பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய அறிக்கையை முறைப்படி தயார் செய்து அனுப்ப வேண்டும்.

8 சங்கத்தின் நிதியாண்டு முடிந்தவுடன் தணிக்கை செய்து அறிக்கையை பொதுக்குழுவின் ஒப்புதல் பெறுவதற்கு பொதுக்குழு கூட்டம் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| S.K.Ramasamy. LIC | P.Rajakumar | A.C.Thangavel | P.Vijayakumar | K.Gangadharan |
| Sundakkapalayam | Gobichettipalayam | Joint Secretary | Erode | Erode |
| | 97892 23379 | Chennimalai | 98427 53547 | K.Velliangiri |
| | yazhinirajkumar2000@gmail.com | 99415 21256 | | Chennimalai |


(ஆ) துணைத்தலைவர்

9 தலைவர் இல்லாத பட்சத்தில் அவரின் நிலையில் இருந்து பொறுப்புகளை கவனித்தல்

(இ) இணை செயலாளர்

செயலாளர் இல்லாத பட்சத்தில் அவரின் நிலையில் இருந்து பொறுப்புகளை கவனிக்க வேண்டும்.

(ஈ) பொருளாளர்

1 சங்கத்தின் பதிவு கட்டணம், போட்டி கட்டணம், சந்தா, நன்கொடைகள், வசூலித்தல், அவைகளுக்கு ரசீது கொடுத்தல், தினசரி வரவு செலவு கணக்குகளை கவனிக்க வேண்டும்

2 தலைவர், செயலாளர் கையெழுத்திடும் செலவு மற்றும் வரவு கணக்கு வவுச்சர்களுக்கு பணம் கொடுத்தல்.

3 சங்கத்தின் அவசர செலவுக்காக தன் கையிருப்பில் ரூபாய் 5000 மட்டும் வைத்துக்கொண்டு மீதி தொகையை சங்கத்தின் பெயரில் பொதுக்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் டெபாசிட் செய்ய வேண்டும்.

16 பொதுக்குழு கூட்டம்

1 சங்கத்தின் எல்லா பொதுக்குழு உறுப்பினர்களும் (சங்கத்தில் பதிவு செய்த அனைத்து அணிகளின் தலைவர் மற்றும் செயலாளர்) கூடுவது பொதுக்குழு கூட்டம் ஆகும்.

# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION

(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)

No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| **S.K.Ramasamy. LIC** | **P.Rajakumar** | **A.C.Thangavel** | **P.Vijayakumar** | **K.Gangadharan** |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>**K.Velliangiri**<br>Chennimalai |


2 பொதுக்குழு கூட்டம் கூட்டுவதற்கு 21 நாட்கள் முன்னதாகவே அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் பொதுக்குழு தேதி, இடம், நேரம், பொருள், தீர்மானம், ஆண்டறிக்கை, உள்ளிட்டவை குறித்து அறிவிப்பு பதிவு தபால் மூலமாகவோ நேரிலோ அல்லது (REGISTERED WHATSAPP) மூலமாகவும் கொடுக்க வேண்டும்.

3 பொதுக்குழுவில் கோரம் மூன்றில் ஒரு பங்கு பொதுக்குழு உறுப்பினர்கள் கொண்ட பெரும்பான்மையாகும்.

4 ஒவ்வொரு வருடமும் பொதுக்குழு கூட்டம் **ஏப்ரல் முதல் செப்டம்பர்** மாதத்திற்குள் நடத்தப்படும்.

**17 பொதுக்குழு அதிகாரம்.**

1 நான்கு வருடத்திற்கு ஒரு முறை பொதுக்குழு உறுப்பினர்கள் (முறைப்படி பதிவு செய்த அனைத்து அணி தலைவர் & செயலாளர்) நிர்வாக குழு உறுப்பினர்களை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

2 செயலாளரால் வாசிக்கப்படும் ஆண்டறிக்கையை பரிசீலித்து முடிவு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

3 வருடாந்திர தணிக்கை அறிக்கையை பரிசீலித்து முடிவு செய்ய வேண்டும்.

4 நிர்வாக குழுவினரால் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் & (RULES & REGULATION) விதிமுறைகளை நிர்ணயிக்க வேண்டும்.

5 சங்கத்தின் சட்டதிட்டங்களில் மாற்றம், திருத்தம் அல்லது சேர்த்தல் தேவையானல் பரிசீலித்து சிறப்பு தீர்மானத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும். அதை வந்திருக்கும் பொதுக்குழு உறுப்பினர்களில் 4-ல் 3 பங்கு உறுப்பினர்கள் ஆதரித்து விசேஷ தீர்மானமாக நிறைவேற்றினால் செல்லத்தக்கது.

6 நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கத்தின் நிர்வாகிகளை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க தேர்தல் அதிகாரி நியமிக்கப்படுவார்.

## 18. தேர்தல் அதிகாரிகள்

ஓய்வு பெற்ற நீதிபதி,
ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரி,
ஓய்வு பெற்ற வட்டாச்சியர்,
} மூவரில் ஒருவர்

மாவட்ட விளையாட்டு அலுவலர்
TNAKA மேற்பார்வையாளர்

## 19 சிறப்பு பொதுக்குழு

1 சங்கத்தின் வருடாந்திர பொதுக்குழு தவிர தலைவர் அல்லது நிர்வாகக் குழு விரும்பும் போது பொதுக்குழுவைக் கூட்டலாம்.

2 இது தவிர சங்கத்தின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் பொதுக்குழுவை கூட்டும்படி தலைவருக்கு விண்ணப்பித்தால் விண்ணப்பம் கிடைத்த 30 தினங்களுக்குள் பொதுக்குழு கூட்ட வேண்டும். இவ்விதம் கூட்டவில்லை எனில் பொதுக்குழுவை கூட்ட விண்ணப்பம் கொடுத்த மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களே பொதுக்குழுவை கூட்டி தீர்மானம் நிறைவேற்றலாம்.

3 விஷேச பொதுக்குழு கூட்டத்திற்கு 21 நாட்கள் முன்னதாக முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும்.

4 மேற்படி முன்னறிவிப்பு கடிதத்தில் இடம், தேதி, நேரம், பொருள் குறித்து குறிப்பிட்டு, கடிதம் மூலமோ நேரிலோ கொடுக்க வேண்டும்.

## 20 துணைக்குழுக்கள்

சங்கத்தின் துனைக்குழுக்களை நிர்வாகக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட வீரர்கள் வீராங்கனைகள் வளர்சிக்காக (ADMINISTRATION PURPOSE) கீழ் கண்ட துணை குழுக்களுக்கு அறிவிப்பார்.

1 நடுவர் குழு,
2 வீரர்கள் தேர்வு குழு,
3 வளர்ச்சி குழு,
4 ஒழுங்கு நடவடிக்கை குழு,
5 தொழில்நுட்ப குழு,
6 தகவல் தொடர்பு துறை குழு,

துணை குழுக்களின் நிர்வாகிகளை தேவைப்படும்போது சங்கத்தின் நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கும்.

அ) ஒவ்வொருத் துணைக் குழுவும் ஒரு தலைவர் மற்றும் ஒரு செயலாளரை உள்ளடக்கியதாக இருக்கும். சங்கத்தின் தலைவர் மற்றும் பொதுச் செயளாலர் ஆகிய இருவரும் ஒழுங்கு நடவடிக்கைக் குழு நீங்கலாக மற்ற அனைத்து துணை குழுவிலும் உறுப்பினராவார்கள்.

ஆ) சங்கத்தின் தலைவர் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் தலைவராகவும் சங்கத்தின் பொதுச் செய்லாளர் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் அமைப்பாளராகவும் இருப்பார்கள். ஏதேனும் ஒரு உறுப்பினர் மீது ஒழுங்கு நடவடிக்கை புகார் மீதான விசாரணை நடைபெறும் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட உறுப்பினர் கலந்துகொண்டு வாக்களிக்க இயலாது.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| S.K.Ramasamy. LIC | P.Rajakumar | A.C.Thangavel | P.Vijayakumar | K.Gangadharan |
| Sundakkapalayam | Gobichettipalayam | Joint Secretary | Erode | Erode |
| | 97892 23379 | Chennimalai | 98427 53547 | K.Velliangiri |
| | yazhinirajkumar2000@gmail.com | 99415 21256 | | Chennimalai |


இ) துணைக் குழுக்களின் பதவிக்காலம் அவர்களை நியமித்த நிர்வாக்குழுவின் பதவிக்காலம் வரையிலும் ஆகும், துணைக் குழுக்களின் முடிவுகள் மற்றும் அறிக்கைகள் அனைத்தும் பரிந்துரைகளாக மட்டும். கருதப்படும் அவைகள் மீதான இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் நிர்வாகக் குழுவிற்கு மட்டுமே உண்டு.

ஈ) துணைக் குழுக்களின் தலைவர்கள் நிர்வாக சபை கூட்டங்களுக்கு சிறப்பு அழைப்பாளர்கலாக அழைக்கப்படலாம். ஆனால் அவர்களுக்கு நிர்வாக குழு கூட்டத்தில் வாக்குறிமை கிடையாது.

உ) ஒழுங்கு நடவடிக்கைக் குழு விசாரணை செய்வதற்கான அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருக்கும் விசாரணை அறிக்கை மேல் நடவடிக்கைக்காக நிர்வாக குழுவில் சமர்ப்பிக்க வேண்டும். மேல் நடவடிக்கை பற்றிய இறுதி முடிவை நிர்வாகக் குழுவே தீர்மானிக்கும்.

## 21. நிதி

1 சங்கத்தின் நிதியாண்டு என்பது ஏப்ரல் முதல் மார்ச் மாதம் முடிய உள்ள ஓராண்டு காலமாகும்.

2 சங்க நிதி என்பது அணிகளின் பதிவு கட்டணம், போட்டி பதிவு கட்டணம், சந்தா, நன்கொடை மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் மானியங்கள் அடங்கும்.

3 பொருளாளர் தன் கை இருப்பில் சங்க அவசர செலவுக்காக ரூபாய் 5000 மட்டுமே வைத்துக்கொள்ளலாம்.

4 சங்கத்தின் பெயரில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கணக்கு தொடங்கப்பட வேண்டும். சங்கத்தின் அவசர செலவுக்காக தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் மூவரில் இருவர் இணைந்து கையொப்பமிட்டு வங்கியில் இருந்து பணம் எடுக்கப்பட வேண்டும்.

## 22. நிதி உதவி செய்தல்

1 சங்கத்தின் உறுப்பினர் எவரேனும் மரணமடைந்தால் அவர்களின் வாரிசுக்கு சங்கத்திலிருந்து நிதி உதவி வழங்கப்படும். தற்போது தொகை எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. நிதி நிலைமைக்கு ஏற்றபடி இத்தொகை வழங்கப்படும். நிர்வாக குழுவின் முடிவுப்படி நிதி உதவி வழங்கப்படும்.

## 23. நகல் வழங்குதல்

சங்கத்தின் சட்ட திட்டங்கள் மற்றும் வரவு செலவு கணக்கு ஆகியவற்றிற்கு நகல் கேட்டு விண்ணப்பித்தால் அவற்றிற்கு உண்டான நகல் செலவு தொகை பெற்றுக்கொண்டு வழங்கப்படும். அந்த நகலில் செயலாளர், பொருளாளர் கையொப்பம் பெற்று கொடுக்கப்பட வேண்டும்.

## 24. பதிவேடுகள் பார்வையிடுதல்

1 சங்க உறுப்பினர்கள் பார்வைக்கு சங்க அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கீழ்கண்ட பதிவேடுகளை இலவசமாக பார்வையிடலாம்.
2 சங்க மினிட் புத்தகம்,
3 உறுப்பினர் பதிவேடு, (படிவம்-6,)
4 வரவு செலவு கணக்கு பதிவேடு.

**25. கீழ் கண்ட பதிவேடுகள் சங்கத்தில் பராமரிக்க கூடிய பதிவேடுகள்.**

1 சங்க மினிட் புத்தகம்
2 உறுப்பினர் பதிவேடு படிவம் - 6
3 வரவு செலவு கணக்கு பதிவேடு
4 ரொக்கக் கணக்கு பதிவேடு,
5 மாதாந்திர கணக்கு பதிவேடு,
6 நிகழ்ச்சி குறிப்பு பதிவேடு,
7 பற்று சீட்டு கோப்பு,
8 தபால் அனுப்புகை பதிவேடு,
9 கடிதப் போக்குவரத்து சம்பந்தப்பட்ட பதிவேடு,
10 சங்கம் சம்பந்தப்பட்ட இதர கோப்புகள்,

**26. சங்கத்தின் அறிக்கைகள் பதிவு செய்தல்**

ஒவ்வொரு வருடமும் சங்க நிதியாண்டு முடிந்து ஆறு மாதங்களுக்குள் சங்க வரவு செலவு கணக்குகள் தணிக்கை செய்து பொதுக்குழுவில் ஒப்புதல் பெறப்பட வேண்டும். அறிக்கைகள் ஒப்புதல் பெறப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் கீழ்கண்ட அறிக்கைகள் சங்க பதிவாளர் அலுவலகத்தில் உரிய கட்டணத்துடன் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

1 உறுதி மொழி,

2 தணிக்கை செய்யப்பட்ட பொதுக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு கணக்கு.

3 நிதியாண்டு முடியும் தேதியில் உள்ள உறுப்பினர்கள் பெயர், முகவரி மற்றும் தொழில் அடங்கிய உறுப்பினர்கள் பட்டியல்.

# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION
(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)
No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| S.K.Ramasamy. LIC | P.Rajakumar | A.C.Thangavel | P.Vijayakumar | K.Gangadharan |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>K.Velliangiri<br>Chennimalai |


27. சங்கத்தின் புதிய உறுப்பினர்கள் சேர்த்தல்.

1 சங்கத்தின் உறுப்பினர்களின் விபரங்களை படிவம் 6-ல் பேணப்படவேண்டும்

2 சங்கத்தில் புதிய உறுப்பினர்களை சேர்த்தல்,நீக்கல், ராஜினாமா செய்தல் போன்ற விபரத்தையும், நிர்வாகிகள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டால் அல்லது பழைய நிர்வாகிகள் விலக்கப்பட்டால் மீண்டும் பழைய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படாமலோ அல்லது ராஜினாமா செய்தாலோ அவர்கள் விபரத்தை மூன்று மாதங்களுக்குள் படிவம் 7-ல் பதிவாளர் அலுவலகத்தில் உரிய கட்டணத்துடன் தாக்கல் செய்ய வேண்டும்.

3 சங்கத்தின் இருப்பிடம் முகவரி மாற்றம் ஏற்பட்டால் அதன் விவரத்தை படிவம் 5-ல் மூன்று மாத காலத்திற்குள் பதிவாளர் அலுவலகத்தில் உரிய கட்டணத்துடன் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

4 சிறப்பு தீர்மானத்தின் நகலை மூன்று மாதத்திற்குள் பதிவாளர் அலுவலகத்தில் உரியகட்டணத்துடன் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

28 சொத்துக்களை பராமரித்தல்

1. சங்கத்துக்காக வாங்கப்படும் ஒவ்வொரு பொருளும் சங்கத்தின் பெயரால் வாங்கப்பட்டு முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

2. சங்கத்தின் சொத்துக்கள் நிர்வாக குழுவின் முழு பராமரிப்பில் இருந்து வரும்.

3. சங்கத்திற்காக வாங்கப்படும் சொத்துக்கள். சங்கத்தின் பெயரில் அப்போதைய தலைவர்செயலாளர் இணைந்து சங்கத்திற்காக வாங்க வேண்டும். சங்கத்தின் சொத்துக்கள் நிர்வாக குழுவின் முழு பராமரிப்பில் இருந்து வரும்.

4. சங்கத்தின் சொத்துக்களையோ பொருட்களையோ எந்த உறுப்பினர்களுக்கும் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் தனித்தனியே உரிமையோ பாத்தியமோ கொண்டாட முடியாது. சங்க பணத்தையோ சொத்தினையோ பிரித்துக் கொள்ளவோ முடியாது. சங்க பணத்தை எவரேனும் கையாடல் செய்தால் அவர்கள் மீது வழக்கு தொடுக்கப்படும்.

## 29. தணிக்கை

சங்கத்தின் வரவுசெலவுகளை ஆண்டுக்கு ஒரு முறை தணிக்கை செய்ய வேண்டும்.

## 30. நம்பிக்கையில்லாத் தீர்மானம்

அ) சங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கும் நிர்வாகிகள் மீது தங்களின் நம்பிக்கையின்மையை முறைப்படி தெரிவிக்கக் கொண்டு வருவதே நம்பிக்கையில்லாத தீர்மானமாகும்.

ஆ) அ) சங்கத்தின் நிர்வாகி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வேண்டுமென்றால், சங்கத்தின் மொத்த உறுப்பினர்களில் 1/3 பங்கு எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்கள் கையெழுத்திட்டு தகுந்த ஆதரங்களுடன் அத்தீர்மானத்தைச் சங்கச் செயலாளருக்கும் அதன் நகல்களை பிற நிர்வாகிகளுக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

ஆ) சங்கத்தின் செயலாளர் மீதே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டால் 16 பிரிவு 2 (அ) வில் குறுப்பிட்டுள்ளபடி தீர்மானத்தைச் சங்கத் தலைவருக்கும். அதன் நகல்களை பிற நிர்வாகிகளுக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

இ) நம்பிக்கை இல்லா தீர்மானம் கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் சங்கத் தலைவருக்கு அறிவித்து விட்டு பேரவைக் கூட்டத்தை செயலாளர் கூட்ட வேண்டும்.

ஈ) நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற சங்கத்தின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு (2/3) உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற்றாக வேண்டும்.

உ) நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் நம்பிக்கையின்மைக்கு ஆளான நிர்வாகி தான் வகித்து வந்த பதவியை இழந்தவராவார். அவ்வாறு பதவி இழக்கும் நிர்வாகி தம்மிடமுள்ள சங்க நிதி உடமைகள், ஏடுகள், கணக்குகள், பிற பொறுப்புகள் முதலியவற்றை சங்கத்தில் தமக்கு மேலுள்ள அல்லது அடுத்துள்ள நிர்வாகியிடம் ஒப்படைத்து விட வேண்டும்.

**31. சங்கத்தை கலைத்தல்**

சங்கத்தை கலைக்க வேண்டும் என்றால் சங்கப்பதிவு விதி 41-ன் படி கீழ் செய்ய வேண்டும் அதாவது சங்கத்தை சரிவர நிர்வாகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டால் பொதுக்குழுவின் சிறப்பு முடிவின்படி சங்கத்தை கலைத்துவிடலாம். அவ்வாறு சங்கம் கலைக்கப்படும் போது சங்கத்தின் பெயரில் சொத்துக்கள் ஏதேனும் இருந்தால் இதே நோக்கங்களை கொண்ட வேறு ஒரு சங்கத்திற்கு சொத்துக்களை மாற்றம் செய்யலாம். சொத்துக்களை உறுப்பினர்கள் பங்கிட்டுக்கொள்ள கூடாது.

தலைவர்

P. Raj 28/04/2026

(பெ.ராஜகுமார்)

ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன்.

செயலாளர்(பொறுப்பு) / பொருளாளர் மற்றும் நிர்வாகிகள்.

P. RAJAKUMAR
PRESIDENT
Erode Dt. Amateur Kabaddi Association
ERODE - 638 452.